**செ. கு. எண்: 203** **நாள் : 28.10.2014**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களின் அறிக்கை – 29.10.2014

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், புளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. காளியண்ண கவுண்டர் என்பவரின் மகன் கண்ணன் என்கிற பழனிசாமி 27.10.2014 அன்று நஞ்சை புளியம்பட்டி கிராமத்தில் வயலில் நீர்பாய்ச்சிக் கொண்டிருக்கும் போது மின் இணைப்புக்குச் செல்லும் மின்பாதையில் உயர்மின் அழுத்த மின்கசிவின் காரணமாக மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், வீரபாண்டி கிராமம், குப்பாண்டம்பாளையம் பகுதியைச் சேர்ந்த திரு. காமாட்சி என்பவரின் மகன் பரமசிவம் 27.10.2014 அன்று தேங்கியிருந்த தண்ணீரை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது அருகிலிருந்த மின்மாற்றியிலிருந்து மின்சாரம் கசிந்து மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**